# Care of the Next Infant (CONI) Programme

Tamil

the lullaby trust

coni

ஒரு குடும்பத்தில் எதிர்பாராத விதமாக மற்றும் திடீரென்று குழந்தை இறந்துவிட்டால், அவர்கள் அடுத்த குழந்தை பிறந்தவுடன் மிகவும் பதட்டமாக இருப்பார்கள் என்பது லாலால்பி அறக்கட்டளைக்கு புரிகிறது.



CONI என்பது ஓர் இழப்பு ஆதரவு திட்டமாகும், இது துயரமடைந்த குடும்பங்களுக்கு உணர்ச்சிப்பூர்வமான ஆதரவை வழங்குகிறது, அவர்களின் புதிய குழந்தையின் வாழ்க்கையின் ஆரம்ப மாதங்களில் நம்பிக்கையைப் பெறுவதற்கு உதவுகிறது, குழந்தை பிறந்த சிறப்பான தருணத்தை அனுபவிக்க உதவுகிறது.

திடீர் குழந்தை இறப்பு நோய்க்கூட்டறிகுறிகளை (SIDS) குறைப்பதற்கான ஆலோசனைகளை குடும்பங்கள் பெறுவதற்கு CONI உதவுகிறது மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக தூங்குவதற்கான அறிவுரைகளையும் வழங்குகிறது.

உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் அல்லது குறைகள் இருந்தால் அல்லது எங்களை தொடர்புகொள்ள விரும்பினால், உங்கள் மருத்துவச்சி அல்லது சுகாதார பணியாளரை அணுகலாம்


info@lullabytrust.org.uk

Bereavement support:
0808 802 6868

Information:
0808 802 6869

lullabytrust.org.uk

**CONI குடும்பங்கள் அவர்களுக்கு தேவையான அளவிற்கு உதவிகளைப் பெறலாம். உள்ளூர் CONI ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடன், அவர்களுக்கு எந்தவிதமான உதவி தேவை என்பதை அவர்கள் தேர்வு செய்யலாம்**

- **உங்கள் சுகாதார பணியாளர்/** மருத்துவரிடம் இருந்து அதிகமான தகவல்கள்.
- **உங்கள் குழந்தை சுவாசிக்கிறது** என்பதை உணர்வதற்கு நகர்வுகளை கண்காணிப்பது.
- **அடிப்படை வாழ்க்கை ஆதரவு** உங்கள் குழந்தை சுவாசிக்கவில்லை என்றால் என்ன செய்வது என்று உங்களுக்கு வழிகாட்டும் பயிற்சி.
- **உங்கள் குழந்தையின்** உடல் நலத்தைக் குறிக்கும் அறிகுறி நாட்குறிப்பு.
- **உங்கள் குழந்தைக்கு** மருத்துவ உதவி தேவையா என்பதை தீர்மானிக்க உதவும் பேபி செக் பயன்பாடு.
- **உங்கள் குழந்தையின்** வளர்ச்சியை எடை அட்டவணையை பயன்படுத்தி கண்காணிப்பது.
- **குழந்தை தூங்கும் அறையில்** பாதுகாப்பான வெப்ப நிலையை கடைப்பிடிக்க பெற்றோர்களுக்கு உதவியாக அறை வெப்பமானி.
- **CONI உடல் நல பாஸ்போர்ட்** உங்களது சிகப்பு புத்தகத்துடன் இணைக்கப்படுகிறது அதனால் உங்கள் குழந்தையின் உடல் நலம் குறைந்தால் அவர்களை உடனடியாக கவனிக்க முடியும்.

